முருகப்பெருமான் துணை

**மகான் திருமூல நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.08.2022**, சனிக்கிழமை

1. அறம் வளர்க்கும் அரங்கனே
ஆற்றல் கூட்டிட கலியிலே
வரங்கள் தரும் வள்ளலே
வாழும் ஞானியே தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசிதன்னை
ஆசிபட சுபகிருது நள்ளிதிங்கள்
அறிவிக்க மூவேழு திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 21 நாள், 06.08.2022 சனிக்கிழமை)
3. வாரமதில் திருமூல நாயனாரும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமின்றி கலியிடரை வெல்ல
சுப்பிரமண்யர் ஞானமாக அருளும்
4. அருளும் அரங்கன் உபதேசம்
அகிலம் மாற்றும் சக்தியாகும்
இருளும் மிரளும் நிலையிலுள்ள
இவ்வுலக சகல மாயைதனையும்
5. அனைத்தையும் அகற்றும் பலமாக
அரங்கன் தரும் ஞானமிருக்க
துணையே கதியென வணங்கி
தேசிகன் திருவடி பற்றிவர
6. வருகவே கலித்துன்பம் ஓடும்
வளமும் பலமும் காப்பும்
தருகின்ற ஞான வாழ்வாக
தவராஜன் ஆசியால் வந்தடையும்
7. அடையவே சகல மாற்றமும்
ஆசியாக ஞான மாகவும்
தடையிலா தரும வழியாகவும்
தரணியில் முழுமைபட இறங்கி
8. இறங்கி உலக மாற்றமாக
எங்கும் ஆறுமுகன் வழிபாடு
வரங்கள் போல பெருகியே
வையகம் இறைபூமி ஆகும்
9. ஆகவே அவரவர் கேட்காமலே
அருளும் பொருளும் ஆறுமுகனார்
மிகையான ஆசியும் பலமும்
மண்ணுலகில் நிரம்பி இருக்கும்

10. இருக்கவே இந்தவித நிலைகள்
இனிதே அரங்க மகான் வழி
கருத்தாக ஆறுமுகன் நடத்தி
கலியுகத்தை மீட்க அருளிவர

11. அருளிவரும் சுட்சுமம் தெரிந்து
அலட்சியம் கொள்ளா சடுதிஅனுகவே
அருளாசியாக திருமூலனும் உரைத்தேன்
அகிலத்தார் அரங்கன் பதம் பற்ற சடுதி மாற்றம்
அருளாசி முற்றே

–சுபம்–